பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை–7 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத ஆனி, ௩ 17—6—55 மலர்–37

305

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 JUL 1955
MADRAS

305/3-55

அறிஞர் ஐன்ஸ்டீன்

(மணிமொழி)

தோற்றம்: 14-3-1879. மறைவு: 18-4-1955.

தமிழ்த்தந்த பெரியோர்போல் உள்ளத்தில் மிக்கார்
தகவுடையார் அறிவியலின் தந்தை கண்டீர்
"எமின்மிக்கார் யாருமில்லை" என்றே எண்ணி
இயன்றதெல்லாம் இயற்றுவித்து அழிந்த இட்லர்
தமையெதிர்த்து அல்லலுற்று உழன்ற வீரர்
தாணிக்கோர் கலைவிளக்கு அறிவின் ஊற்று
இமயத்தின் உயர்வுடையார் அருளின் மிக்கார்
இருபதாம் நூற்றாண்டின் அறிஞர் ஐயே!

அணுவையே பிளந்துயிரை வாழ வைக்க
ஆற்றலையே செலவிட்டார் ஆனு லந்தோ
அணுவளவும் கருணையிலார் தீய நெஞ்சால்
அழித்தலுக்கே செலவிட்டார் சிந்தை நொந்து
மனிதர்குலம் மாணிக்கம் அழுத கண்ணீர்
மக்கள்குலம் காத்திடவே படையாய் மாறி
"அணுவகுப்போம் அமைதியே காப்போம்" என்று
ஆர்த்தெழுந்த செய்தியெலாம் கேட்கி லீரோ!

இறவாத புகழுடையார் உலகம் போற்றும்
எண்மரிலே* ஒருவரிவர் ஏற்றம் மிக்கார்
திறவாத அறிவுலகைத் திறந்து வைத்த
திறத்துக்கே உயர்'நோபல் பரிசு' பெற்றார்
அறப்பெரியார் புதுக்கருத்தைச் சுருக்கிச் சொல்லும்
ஆற்றலிலே வல்லவராம் அறிஞர் போற்றச்
சிறந்துயரும் "ஒப்புமைக் கொள்கை" தந்து
செயற்கரிய செய்தலோர் பெரியர் தாமே!

* எண்மர்: பித்தகோரஸ் நியூட்டன் முதலிய எட்டுப் பெரிய விஞ்ஞானிகள்.

பேச்சு

'மூர்த்தி'

ஆ! என்ன பேச்சு என்ன பேச்சு, "அவன் அவள்...... என மூவினமையின்" இந்த சிவஞானபோத முதற் சூத்திரத்திற்குக் கூறிய விளக்கங்கள் அப்பப்ப உள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பை அல்லவோ உண்டாக்கி விட்டது. ஆம் சென்னைக்குச் சென்றுகொண்டிருந்த நான் செங்கற்பட்டில் தங்கி அன்றைய பொழுதினை நல்ல தொன்றாக ஆக்கிக்கொண்டேன். நம் மனத்தில் தோன்றும் எண்ணங்களை வெளியிடவும், அவ்வெண்ணங்களைப் பிறருக்கு அறிவுறுத்தவும் பேச்சு மிக மிக இன்றியமையாததாகின்றது இவ்வாறான பேச்சு மனதில் நொடிக்கு நொடி எழும்பும் கருத்துக்களின் தொகுப்பு என்றால் மிக மிகப் பொருத்தமாக இருக்கும். இசை, நடனம், நடிப்பு, சித்திரம் இன்ன பிறவற்றைப் போன்றுதான் பேச்சும் ஒரு கலை. கருத்துக்களின் தொகுப்பை உயர்ந்த நிலையில் ஒழுங்கு படுத்தி, பிறர் நன்கு புரிந்துகொள்ளும் முறையிலும், புரிந்து தெளிந்து அனுபவிக்கும் முறையிலும் தக்க வார்த்தைகளைக்கொண்டு வெளிப்படுத்தினால் மட்டுமே நாம் பேசும் பேச்சின் முழுப் பயனை அடைந்தவராகின்றோம் பேச்சு விளக்கமாகவோ அன்றி சுருக்கமாகவோ இருப்பினும், தெளிவாக, கேட்போர் உள்ளத்தினைத் தூண்டக்கூடிய வகையிலும் அமைந்திருப்பது மிக்க நலம் பயக்கும்.

எவரொருவர் பேச்சுக்கலையில் நாட்டம் வைத்து, வெளிவரும் வார்த்தைகளின் உட்பொருளைக் கவனித்து, தான் பேசப்புகும் பேச்சின் தரத்தினை அளவிட்டு பிறர் உள்ளத்தினைக் கவரும் முறையில் பேசுகின்றனரோ அவர், தம் வாழ்க்கைத் துறையில் தொழில் துறையில் ஏன்? தான் முடிக்க விரும்பும் எந்தக் காரியங்களிலும் அநேகமாக வெற்றியைக் காணுவர் என்பது அங்கைக்கனி, ஒருவர் பேச்சில் திறமை உடையவராக இருந்தால் அவரிடம் நமக்கு நம்மையுமறியாமல் ஒரு நல்ல எண்ணம் ஏற்பட்டு விடுகிறது. இத்தகைய நல்ல எண்ண அளவினைக் கொண்டே வக்கீல், மருத்துவர், வியாபாரி, மூவரும் தம் வாழ்வில் உயர்ந்து செல்கின்றனர். அவர்களுடைய பேச்சில் கடினமான காரியத்தைச் சுலபமான முறையில் சாதித்துக் கொள்ளும் ஆற்றலும், நாணயமும், பெருந்தன்மையும், வேடிக்கையும் அதே நேரத்தில் - சந்தர்ப்பத்திற்கேற்றாற்போல கடுமையும், எச்சரிப்பும், அதிகாரமும் நிறைந்திருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் அவர்களுடைய வார்த்தைகள் நம்பிக்கையற்றவர் மனதிலேயும் ஒருவித நம்பிக்கையைத் தூண்டிவிடும் ஆற்றல் வாய்ந்ததாக இருக்கின்றது.

சிலர் கதை சொல்வதிலும், வேடிக்கையாகப் பேசி வம்பளப்பதிலும் ஆற்றல் வாய்ந்தவர்களாக இருக்கின்றனர். இத்தகைய பேச்சுக்களினாலேயே தங்கட்கு வேண்டுவனவற்றை அவர்கள் எவ்விதத் தடையுமின்றிச் சாதித்துக் கொள்வார்கள். ஆனால் இவ்வாறு பிறரை மயக்க வைக்கும் வேடிக்கையான சாகசப் பேச்சுத்திறன் எல்லோருக்கும் அமைந்துவிடாது.

(வரும்)

குற்றமும் நாணமும்

குற்றமும் நாணமும் இணைபிரியாத தோழிகள். அவர்கள் பிரயாணம் இணைந்தே இனிமையாகச் சென்றது. நாள் செல்லச் செல்ல இருவரின் இடையிலிருந்த ஒற்றுமையும் பற்றும் மெல்லத் தளரலாயின. குற்றம் அடிக்கடி நாணத்துக்கு மனக்கலக்கம் தரும் செயல்களில் ஈடுபடலானாள் நாணமும் விழிப்பாகவே தன் தோழியான குற்றத்தின் சதிகளை அவ்வப்போது அம்பலப் படுத்தி வந்தாள்; மனவேறுபாடு விரைந்து வளர்ந்தது. ஒருவரை யொருவர் பிரியத் துணிந்தனர். குற்றம் தோழியை விரைந்து நீங்கி அச்சமின்றி முன்னேறிச் சென்று தன் முன் கொலைஞன் உருவில்சென்று கொண்டிருந்த விதி என்னும் துணைவனை அடைந்தாள். ஆனால், இயற்கையிலேயே பயந்த பண்புடைய நாணம் அவளுடன் செல்லாமல் திரும்பித் தன்பின் வந்து கொண்டிருந்த நல்லொழுக்கம் என்னும் அருட் செல்வனை அடைந்தாள். தோழியர் இருவரும் தம் பிரயாணத்தின் முதலில் விட்டுப் பிரிந்தவர்களே இவர்களிருவரும்.

இவ்வாறே மக்கள் தீநெறிகளில் நீண்ட நாட்களைக் கழிக்க பின் நாணம் அவர்களைப் பிரிந்து சென்று அடிப்படையில் மிதந்து நிற்கும் நல்லொழுக்கத்துக்கு உதவியாக நிற்றல் கண் கூடு.

—'ஆலிவர் கோல்டுஸ்மித்'

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros,
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், இ. சு. பாலசுந்தரம். குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)

3 நல்ல பிள்ளை.

இராமலிங்க சுவாமிகள் பல உயர்ந்த பாக்களை எளிய நடையில் தெள்ளிய முறையில் இனியவகையில் இயற்றியுள்ளார்கள்.

அவர்கள் இயற்றிய 'திருஅருட்பா' தெவிட்டுதலற்ற தேன்தமிழ்ப் பாடல்கள் நிறைந்த செழுமை பொருந்திய உயர் நூல்.

திருவருட் பாக்களை மக்கள் விரும்பிப் பயிலவேண்டும். அவைகள் மனித வாழ்க்கைக்குப் பேரின்பத்தை யளிக்கும் வழிகாட்டிகளாக அமைந்துள்ளன. எல்லையற்ற தொல்லைகள் நிறைந்த இவ் வாழ்விலே திருவருட்பாக்கள்தாம் தெளிவைத் தந்து சித்தத்தைத் திடப்படுத்தக் கூடியன, தன்னம்பிக்கையை யூட்டக்கூடியன.

அவைகள் அநுபவத்தின் முத்திரைகள்; அறிவுடைமையின் விளக்கங்கள்; பக்தியின் பாதைகள்; பரமனின் தோத்திரங்கள்.

திணிபான நம் மனோ நிலைமீது ஆண்டவனின் அணியார் அரவிந்தம் அரும்பவேண்டுமெனின், நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருக இறைவனை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து கசிந்து கண்ணீர் மல்கிக் காதலால் இத் திருவருட்பாக்களை ஓதினால் தொல்லையிரும் பிறவி சூழுந் தளை நீக்கி அல்லலறுத்து ஆனந்தம் ஆக்குவான் ஆராவமுதான அளவிலாப் பெம்மான்.

அவ்வாறான உயர்ந்த பாக்களில் ஓர் நல்ல பாடலை ஈண்டு தெளிவிக்கின்றேன்.

மனமானது ஓர் பேய்க்குரங்கிற்குச் சமமாகும்; குரங்கு எவ்வாறு கிளைக்குக் கிளை தாவுகின்றதோ அதுபோலவே மனம் ஒன்றைவிட்டு ஒன்றைத் தாவக் கூடியது.

குரங்கானது தன்னிடத்தில் கிடைத்த மாலையை அணிந்து அழகு பார்க்காது; துணிந்து அதனைப் பிய்த்துச் சின்னாபின்னமாக்கிவிடும்; மனமும் அப்படியே. மனமானது ஐம்பொறிகளில் நிலவும்; உடல்மாலையை ஞானவடிவமான ஆன்மாவோடு எழில் காணச் செய்யாது, பொறிகளை அது தன் இச்சைக்கேற்பப் பிய்த்து அதனதன் வழிச் சென்று மீளும்.

மனம் ஒன்றிலே நில்லாது. ஆசைகள் ஒன்றையொன்று சங்கிலிபோல் பற்றக்கூடியவை. அத்தகைய ஆசா நிகளங்களாகிவிடும்படியாக மனத்தைப் பயமுறுத்துகிறார்கள் இராமலிங்க அடிகள்.

ஐம்புலன்களின் தொகுப்புருவான மனமானது நம் வழி நில்லாது, ஞானவடிவமான கடவுளோடு இயைந்தமையாது உலக ஆரவாரங்கட்குட்பட்டு நம்மை இடுக்கணில் ஆழ்த்துகின்றது. மனத்தை அடக்கமுடியாது எல்லோரும் திகைத்து நிற்கின்றனர்.

திருநாவுக்கரசரே ஒரு முறை திகைத்து நின்று "........உகவா வண்ணம் ஐவரை அகத்தே வைத்தீர் அவர்களோ வலியர் சாலச் செய்வதொன் றறியமாட்டேன்" என்று திருப்புகலூரானிடம் கூறி வேதனைப்படுகின்றார்கள்.

அத்தகைய மயக்கிடும் வஞ்சப் புலனைத்தையும் அடக்க வேண்டுமெனின் ஆண்டவன் அருள் பெறவேண்டும். வள்ளலார் அவ்வாறு அருள் பெற்ற பின்பு மனத்தை எதிர்த்து நின்று பேசுகிறார்கள்; அவர்கள் பேசும் வகையைக் காண்மின்கள்.

பேய்க்குரங்கு மனமாகிய மடப்பயலே! நீ, என்னை மற்ற மக்களைப்போல் புலன்கவர்ச்சிக்கு அடிமைப்படுவன் என்றோ, உனக்கு அடங்கி நடப்பவன் என்றோ எண்ணி மருட்டப்பார்க்காதே. என் சொல்வழியே நீ நடப்பதலால், உன் அதிகாரம் தினை அளவுகூடச் செல்லவொட்டாமல் செய்துவிடுவேன்.

நான் பெற்றுள்ள திருவருளினால், உன்னை எல்லாரும் பார்த்து எளனம் செய்யும்படியாக அவமானப்படுத்திவிடுவேன். நீ நாணித் தலை குனிந்து நடக்கும்படியாக, உன்னுக்குள்ளேயே 'நினைத்த காரியத்தைச் சாதிக்க முடியவில்லையே' என்று வெம்பி வேதனைப்படும்படியாக ஒரு கணத்திலே செய்துவிடுவேன்.

என்னை நனவினால் அறிந்து கொள்ளவில்லையா நீ? என்னை யாரென்று என்று எண்ணி உன் அதிகாரத்தைச் செலுத்துகிறாய்?

ஞானசபைத் தலைவனாகிய நடராசப் பெருமானுக்கு நல்ல பிள்ளை நான், செல்வப் பிள்ளை நான்: தெரிந்துகொண்டாயா இனி என் சொற்படி கேட்டு அடங்கி நட. ஆமாம் சொன்னேன்.

இப்படி ஆனந்திப்பதில் ஆனந்தத்தில் அவல்மனத்தை எதிர்த்து வீராப்போடு பேசும் நயங்காணப் பாடல் விளங்குவதை அறிமின்; "மனமெனுமோர் பேய்க்குரங்கு மடப் பயலே நீதான் மற்றவர்போல், எனை நினைந்து மருட்டாதே கண்டாய்!

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

வினாடிகளில் கணவன் வானுலகெய்துவது நிச்சயம் எனக் கருதினாள்.

(செருக்களத்தில் உயிரிழக்கும் வீரர்கள் வீரசுவர்க்கம் செல்வராகவும், சென்று தேவமாதரைக் கூடுவரென்றும் கூறுவர்.)

எனவே, இப்பெண்மணி—"தன் கணவன் உயிரிழந்து தனிமையில் சுவர்க்கம் சென்றால் தேவமாதர்கள் இவரை விரும்பக் கூடும்; தேவமாதர்களை இவர் விரும்பவும் நேரிடலாம். ஆனால், நாமும் உடன் சென்றால் "மனைவியோடு இருக்கும் கணவனைத் தேவமாதரும் விரும்ப அஞ்சுவர்; விரும்ப மாட்டார்கள். அப்பொழுது கணவன் கற்பும் கெடாதிருக்கும்–" என எண்ணியவளாய்த் தானும் உடன் மாண்டாள். தன்கற்பைக் காத்துக் கொள்வதில் கருத்துச் செலுத்தும் அப் பெண்மணி தன்கணவன் கற்பைக் காப்பதிலும் மிகக் கவனம் செலுத்தினாள். "நான்கற்புடையவள் என்று மட்டும் அவள் சொல்ல விரும்பவில்லை; நாங்கள் கற்புடையவர்கள் (என் கணவரும் கற்புடையவர்) என்று சொல்லிக் கொள்ளவே அவள் விரும்பினாள். "என்கற்பிற்குக் களங்கம் ஏற்படக் கூடாது" என்று மட்டும் அவள் கருதவில்லை "எங்கள் கற்பிற்குக் களங்கம் ஏற்படக் கூடாது" என்றும் (பன்மையில் கூறவே) அவள் விரும்பினாள்.

"தன்மனைவி கற்பிழந்தவள்" என்ற சொல்லை எப்படி ஆண்கள் ஏற்க அஞ்சுகின்றனரோ, அது போலவே "தன்கணவன் கற்பிழந்தவன்" என்ற சொல்லைத் தானும் கேட்க அஞ்சினாள். தன் இறப்பினாலாயினும் தன்கணவன் கற்பைக் காக்கத் தயங்கவில்லை, "நாம்மட்டும் கற்புடையவள் "என்பதைவிட" நமது குடும்பமே கற்புடையது" என்பதே சிறந்ததென அவள் கருதினாள்.

இந்த ஆண்கள், "மனைவியின் கற்பிழப்பு தனக்கு அவமானம் "என்று எவ்வாறு கருதுகின்றார்களோ, அவ்வாறே தன்னுடைய கற்பிழப்பும் மனைவிக்கு அவமானம்" என்று கருத வேண்டும்.

"ஆண்களும் கற்பைக்காத்துக் கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும்" (பண்டைக் காலத்தில் இருந்தார்கள்) என்பதை மறைமுகமாக உணர்த்திய சயங் கொண்டார் "கணவன் கற்பில் மனைவியுங் கவனம் செலுத்த வேண்டும்" (செலுத்தினாள்) என்பதையும் விளக்குகின்றார்கள்.

இதோ சயங் கொண்டாரின் சொல்லமைவு நிறைந்த உயர்ந்த பாடல்.

"தரைமகளுந் தன் கொழுந
னுடலந் தன்னைத்
தாங்காமற் றன் கரத்தாற்
றாங்கி விண்ணாட்
டரமகளி ரவ்வுயிரைப்
புணரா முன்ன
மாவியொக்க விடுவாளைக்
காண்மின் காண்மின்"

(கலிங்கத்துப்பரணி, களம்பாடியது)

மனத்தால் பிறமாதரை நினையாதவன் மனம் நீங்கிய உடலாற் றீண்டாதவனாகவும் விளங்க வேண்டும் என்பதனுடன் உடல் நீங்கிய உயிராயினும் பிறமாதரைச் சாரக்கூடாது எனமுறையாக விளக்கியுள்ளது ஆசிரியரின் "சொற்பிரயோகத் திறமை"யை மிகத் திறம்படக் காட்டுகிறது இப்பாடல்.

மாண்ட பிறகும் தன்கணவன் கற்பிழந்தவனாக இருக்கக்கூடாது (என்றால் மாளுவதற்குமுன் எவ்வளவு கற்புடையவனாக கண்ணியனாக விளங்கி இருக்க வேண்டும் என்றுபாருங்கள். "இப்படி விளங்கவேண்டும் அனைவரும்" என்பதைச் சயங்கொண்டார் சொல்லாமல் சொல்லுவதை அறிவதே இப்பாடலை நன்கு கற்றதற்குப் பொருளாகும்) என்று எண்ணித் தன் கணவன் கற்பை, தனது உயிரீந்துக் காத்தாள் (அதன் மூலம் தன்கற்பையுங் காத்துக் கொண்டாள்) என்பதைச் சுட்டிக் காட்டி ஆண்களுடைய கற்பின் அவசியத்தைத் தெள்ளென விளக்குகின்றார்.

"தரைமகள்சன் கொழு
நன்றன் உடலந் தன்னைத்
தாங்காமல் சன்
னுடலால் தாங்கி......"

இப்படியும் பாடம் உண்டு.

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
59 கிடங்குத் தெரு, சென்னை 1.

இலக்கியச் சுரங்கம்

(வே. ந. நாராயணன்.)

இலக்கியச் சுரங்கம்; ஆம், இலக்கியம் ஓர் பெருஞ் சுரங்கமே. தோண்டத் தோண்ட அரிய பெரிய பொருள்கள் கிடைக்கும்.

பண்டைய இலக்கியத் தலைவர்கள் தாங்கள் எழுதிய ஒவ்வொரு பாடல்களையும் (வகையோடு தோண்டத் தோண்ட நகையோடு ஒளிரும் பொருள்கள் பல தரும்) சுரங்கம் போன்று கருத்தாழமுள்ளதாகச் செய்துள்ளனர்.

இலக்கியச் சுரங்கத்தில் வகை தெரிந்து திறனுடன் பணியாற்றும் உரைவல்லார்கள் புதிய புதிய உயர்ந்த உலோகங்களை, நற்கருத்துப் பொருள்களைக் கண்டெடுப்பர்.

யானோ புதியவன். இலக்கியச் சுரங்கத்தில் இப்போதே நுழைகின்றேன். எனக்குத் தெரிந்த, கிடைத்த பொருள்கள் சிலவற்றில் இரண்டாவது முறையாக ஒன்றை வெளியிலுள்ளார்க்குப் பயன் மிகத் தருமாறு எடுத்துக் காட்ட முனைகின்றேன்.

(முன்னர் "உள் ஒளிர் இறைவன் உடல் இடங்கொண்டான்" என்ற தலைப்பில் ஒரு நற்பொருளை "இலக்கியச் சுரங்க'த்தின் வழி எடுத்துக்காட்டியது நேயர்கட்கு நினைவிருக்கலாம் இஃது இரண்டாவது)

2. "கணவன் கற்பு"

(குறிப்பு:— இஃதோர் பாடல் விளக்கம். கற்பைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையன்று)

பெண்களுக்குக் கற்பே உயிர் போன்றது. "பெண்கள் கற்பு கெடாது விளங்கவேண்டும்" என்ற விதி, கோட்பாடு மற்ற நாடுகளைவிட தமிழ் நாட்டிற்கே மிக மிக உரித்தானது. கற்பு நெறி தவறாத மாதர்கள் நிறைந்தது நம் தமிழ் நாடு என்றமையினால்.

கற்பின் உயர்வைத் தமிழ் மன்னர்கள் அறிந்திருந்ததனாலன்றோ சேரன் செங்குட்டுவன், கண்ணகிக்கு, கற்புக்குக் கோயில் கட்டினான்!

இவ்வாறு பெண்கள் கற்பு பாராட்டப் பெற்றும் பாதுகாக்கப் பெற்றும் வந்தது, வ-ரு-கி-ன்றது. இனிக் கட்டாயமாக வரும்.

ஆண்களும் கற்புடையவர்களாக விளங்கவேண்டும். இது பண்டைக் காலத்தில் கொள்ளப் பட்டது. இன்றும் ஆன்றோர்களால் "அவசியம்" எனக் கொள்ளப் படுகின்றது.

ஆனால், இக்காலத்திலே பலர் ஆண்களின் கற்பையே கருதுவதில்லை.

"கற்பு என்றால் அது பெண்கட்கே யன்றி ஆண்களுக்கன்று" என்று சொல்லும் குறைமதியாளரும் பலர் காணுகின்றனர். இவர்களெல்லாம் குடும்பத்தின் நலத்தை மிகுதியும் கருதாதவர்கள்; பொறுப்பற்றவர்கள்.

குடும்பத்தில் பெண்கள் கற்புடன் விளங்குவதுபோல் ஆண்களும் கற்புடையவர்களாக விளங்கவேண்டும். அதுவே உண்மை வாழ்க்கையாகும், உயர்விற்கு விளக்கமாகும். அவ்வாழ்க்கையில் இன்னல் இல்லை, இழிவில்லை இன்பமே என்னாளும். துன்பமில்லை, துயர் இல்லை தூய்மையே நிறைந்திருக்கும்.

மனைவியே யன்றிக் கணவனும் கற்புடையவனாக விளங்கவேண்டும். கணவனது கற்பைக் காப்பதில் மனைவிக்குப் பங்குண்டு; அக்கரை வேண்டும்.

கற்புநெறி தவறாத 'கணவனையும், (அக் கணவனது கற்புநிலை, மாண்ட பிறகும் களங்கப்படக் கூடாது என்று கருதித் தானும் உடன் மாளும்) கற்புக்கரசியாகிய மனைவியையும் போரில் தான் கண்டதாகச் சயங்கொண்டார் பாடுகின்றார். 'காண்மின் காண்மின் கற்பின் மேன்மையை" என்று கூவி அழைக்கின்றார்கள்; குவலயத்திற்கு உணர்த்துகின்றார்கள்.

தன் கணவன் போருக்குச் சென்றவன் யாருக்கும் அஞ்சாது குருதி வடிய வடிய இறுதிவரை போர் செய்து மார்பிலே வாள் பாய அக்களத்திலேயே சாய்ந்து விழுந்தருவாயில் மனைவி அவனைத் தன் மார்போடு அணைத்துக்கொண்டாள் (பூமியை பூமாதேவி என்னும் பெண்ணாகக் கருதுவர்) எனவே— தன் கணவர் பூமியின் மீது விழுந்தால் பூமாதேவியுடன் சேர்ந்ததாகும்; இதுநாள் எந்த மாதரையும் மனத்தாலும் விரும்பாத நம் கணவர் இந்தக் கடைசி காலத்திற்கூட கற்புடையவராகவே விளங்கவேண்டும்; 'தன் கணவர் கற்பிழந்தவர்' என்ற அவச் சொல் எக்காலத்திலும் எவ்விதத்தாலும் நம்மைச் சாரக் கூடாது—" என்று கருதியவளாய்க் கணவனைப் பூமியில் சாயாதவாறு தன்மார்போடு அணைத்துக்கொண்டாள்.

பிறகு, தன் கணவன் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள் உயிர் போகுந் தருவாயில் காணப்படுவதை அறிந்தாள். இன்னும் சில

அவைகளுடன் கூடிப் பெருந்துளிகளாக மாறிப் பூமியை அடைகின்றன. மேகங்கள் இவ்வளவு கனமில்லாமலிருந்தால் நீர்த்துளிகள் பூமியை அடையுமுன் ஆவியாக மாறிவிடும். மழை பெய்யாது. வெப்பப் பிரதேசத்தில் பெய்யும் பெரிய மழைகள் எல்லாம் முன்னே கூறிய பனிக்கட்டித் துணுக்கு முறையிலேதான் பெய்கின்றன. ஒருமேகத்தில் பனிக்கட்டித் துணுக்குகளும் நீர்த்துணுக்குகளும் இருந்தால் பெருத்தமழை பெய்வது உறுதி.

எனவே, செயற்கை மழையை உண்டாக்க, உறைநிலைப் பிரதேசத்தை அடைந்து, பனிக்கட்டித் துணுக்குகளாக மாறமுடியாத நிலையில் உள்ள மேகங்களின் மீது பனிக்கட்டித் துணுக்குகளைத் தூவலாம். தூவப்பட்ட பனிக்கட்டித் துணுக்குகள் தூவிய விதைகளைப்போல மிகவிரைவில் விருத்தி அடைந்து மேகத்திலுள்ள நீரினைப் பூமிக்குக் கொண்டு வரும். பனிக்கட்டித் துணுக்குகளுக்குப் பதிலாக திட (Solid) கார்பண்டை ஆக்ஸைடு துணுக்குகளைத் தூவினாலும் நல்ல பலனைத் தருதல் நிச்சயம். திடரூபமான கார்பண்டை ஆக்ஸைடை உலர்ந்த பனிக்கட்டி (Dry ice) என்பர். அஃது 80 C உஷ்ண நிலையில் இருக்கும். அக்கட்டி ஒன்று கீழே வைக்கப்பட்டால் அதினின்று பனிக்கட்டித் துணுக்குகள் புகை போன்று அடர்த்தியாக மேல் நோக்கி எழும். இம்மாதிரியான கட்டி ஒன்றினை மேகத்தின் மேலிட்டால் அங்கே உள்ள ஈரக்காற்று திடுமெனக் குளிர்ந்து விடும். அக்கட்டியில் உள்ள துணுக்குகள் மேகம் முழுவதும் பரவின் அவை பெரிய பெரிய நீர்த்துளிகளாக மாறும், ஆனால் அவை அவ்வாறு பரவுவதில்லை. அதிகமாகப் பரவாமல் போட்ட இடத்திலேயே இருக்கின்றன. ஆதலால் அதில் எவ்வளவு துணுக்குகள் நீர்த்துளிகளாக மாறும் என்பது மேகத்தின் சில நிலைமைகளைப் பொறுத்திருக்கிறது. அவை அதில் உள்ள நீரின் அளவு, உஷ்ணநிலை, குமுறல் என்பனவாம். இதுவரையில் செய்த ஆராய்ச்சிகளினால் 100 பவுண்டு முதல் 300 பவுண்டுவரை உலர்ந்த பனிக்கட்டித் துணுக்குகளைச் சில தேர்ந்தெடுக்கப் பட்ட மேகங்கள் மீது வீசினால் சுமாராக மழை பெய்யும் எனத் தெரிகிறது. கால்சியம் குளோரைடைத் தூவினால் அதன் துணுக்குகள் நீர்த்துணுக்குகளைச் சீக்கிரமாகத் தம்மிடம் இழுத்து மழைத்துளிகளாக மாற்றுகின்றன. காற்றில் உள்ள இயற்கையான பற்றுக் கோடுகளைவிட இவைமிகக் குறைவான உயரத்திலேயே நீர்த்துளிகளை உண்டாக்கிவிடும். இம்முறையில் ரஷ்யாவில் மழை உண்டாக்கப் பட்டது.

மேகத்தில் ஏதாவது ஒரு விதத்தில் பனித்துணுக்குகள் விருத்தியாக்கப் பட்டவுடன் அவை தோன்றிய இடத்தில் வெப்பம் வெளியிடப்படுகிறது. இந்த வெப்பம் மேகம் முழுவதும் பரவிச் சுற்றிலுமுள்ள காற்றைவிட மிக்க வெப்பமாகவும், இலேசாகவும் செய்து விடுகிறது. அதனால்தான் திடீரென்று குபீரென மேல் நோக்கிக் கிளம்புகிறது. நியூ சௌத் வேல்ஸில் சோதனைகள் நடத்தப் பட்ட போது, மேகத்தில் பனிக்கட்டித் துணுக்குகள் விதைக்கப்பட்டவுடன் இதுபோல ஒருகாட்சி தென்பட்டது. அப்போது அதன் கீழ்ப் பகுதியிலிருந்து மழைபெய்தது. அங்கு உறைநிலை 18, 000 அடி உயரமும் மேகங்களின் உச்சி 25, 000 அடி உயரமுமாக இருந்தது அதன்மீது உலர்ந்த பனிக்கட்டி தூவப்பட்ட ஒன்பது நிமிடங்கட்கெல்லாம் அதில் ஒருபகுதி மேல் நோக்கிக் கிளம்பிற்று பின்னர் சில நிமிடங்களில் மழை பெய்தது. மக்கள் இக்காட்சியை கண்டு வியப்புற்றனர்.

செயற்கைமழை உண்டாக்கும் சோதனைகள் இன்னும் பூரண வெற்றியைத் தரவில்லை. தக்க மேகங்களைத் தேர்ந்தால் வெற்றி நிச்சயமாகக் கிட்டலாம். இது மிக்க தொல்லைதான் நிச்சயமான பலன் வேண்டுமேல் இன்னும் ஆராய்ச்சிகள் நடைபெற்று ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும். செங்குத்தான காற்றோடைகள், உஷ்ணநிலை, காற்றின் அமுக்கம், ஈரம் முதலியவற்றுக்குள்ள தொடர்பினை நன்கு ஆராய்ச்சி செய்தல் வேண்டும். அதுவல்லாமல் விரைந்து செல்லும் ஆகாய விமானங்களிலிருந்து கொண்டே மேகத்திலுள்ள நீர்த்துளிகளின் அளவு, எண்ணிக்கை முதலியவைகளைக் கணக்கிடும் பயிற்சி மிகவாக வேண்டும். இவைகளெல்லாம் நன்கு பெறுவதற்குப் பல ஆண்டுகள் ஆகும். அதுவரை, இதுவரை இருந்தது போலவே எல்லாம் அவன் செயலென எண்ணி விருப்பு வெறுப்புகட்கு இலக்காகி இருக்க வேண்டியதுதான். இவ்வாராய்ச்சியில் ஓரளவாவது வெற்றிகண்ட பெரியார்கட்கும் வெற்றிபெற இருக்கும் ஆராய்ச்சியாளர்கட்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

"அண்டத்தரும் பேறல்
மேகன் வாழ்க"

மழையின் விந்தை

‘மூர்த்தி’

(முன் தொடர்ச்சி)

ஆனால், இவ்வாறு உண்டாகும் நீர்த்துளிகள் வேறு. மழையாகப் பெய்யும் நீர்த்துளிகள் வேறு. இப்படி உண்டாகுபவை யெல்லாம் மழையாகப் பெய்து விடுவதில்லை. காரணம் அவை மிகச் சிறியவையா யிருப்பதாலும், மிக நிதானமாகக் கீழே இறங்குவதாலும், சிறிது தூரம் அவை தெவிட்டிய பகுதிக்குக் கீழேவந்தவுடன் ஆவியாக மாறிவிடுகின்றன. மழைத்துளிகள் இவைகளைவிடப் பல லட்சம் மடங்கு பெரியவை. அவை அதிவிரைவாக இறங்குன்றன; மெல்ல ஆவியாகின்றன. எனவே, பூமிக்கும் அவற்றுக்கும் இடையே உலர்ந்த காற்றுப் பிரதேசம் இருப்பினும் அவைகள் ஆவியாக மாறாமல் பூமியைவந்து அடைய முடிகின்றது. ஒருமேகத்தில் உள்ள நீர்த்துளிகள் எல்லாம் மழைத்துளிகளாக மாறுவதற்குரிய அளவு நீராவி எப்போதும் இருப்பதில்லை. ஒரு சில நீர்த்துளிகளே அவ்வாறு மாற முடியும். அப்படி சிலவற்றை மட்டும் மழைத்துளிகள் அளவுக்கு மாற்றக்கூடிய சக்தி எது எனில் மேகத்தில் உள்ள நீர்த்துளிகளின் மாறுபாடான பருமனேயாம். ஏனெனில் அவற்றுள் சிறிவையாயிருப்பவை கீழே இறங்கும்போது மீண்டும் ஆவியாகி விடுவதைப் பார்த்தோம். அப்போது அந்த ஆவி பெரிய நீர்த்துளிகளால் இழுக்கப்பட்டு மேலும் பெரியவையாகின்றன.

எதிர்பாரா வகையில் திடுமெனப் புயலடித்து மழை பெய்யும்போது உண்டாகும் நீர்த்துளிகள் கூட இவ்வாறு உண்டாவதில்லை. அவை பனிக் கட்டித் துணுக்குகளாக மேகத்தின் மேல் பாகத்திலிருந்து பிறகு கீழே வரவர மழைத்துளிகளாக மாறிவிடுகின்றன. காற்றில்உள்ள தூசிகளைச் சுற்றியே இப் பனிக்கட்டித் துணுக்குகள் உண்டாகின்றன. தூசிகளில்லையேல் அவை அவ்வாறு சாதாரணமாக உண்டாக முடியாது. அவற்றைச் சுற்றி உண்டாகும் பனிக்கட்டித் துணுக்குகளும் சாதாரண உறை நிலை (Freezing Point) யாகிய பூஜ்யம் டிகிரி (செண்டிகிரேடு)க்கும் கீழ் 13லிருந்து 15 டிகிரிக்குள்தான் உண்டாகின்றன. ஆதலால் இதைவிட உஷ்ண நிலையில் உள்ள மேகங்களில் நீர்த்துளிகள் மட்டும் இருக்கும் பனிக்கட்டித் துணுக்குகள் இரா. அதிக உயரமாகச் சென்று தங்கியுள்ள மேகங்களில் மேற்கூறியாங்கு பனிக்கட்டித் துணுக்குகள் உண்டாகியிருக்கும்: மிக்க உயரத்தில்தான் பனிக்கட்டிகள் உண்டாவதற்கு வேண்டிய தாழ்ந்த வெப்ப நிலை இருக்கிறது. தாழ்ந்துள்ள மேகங்களில் அதற்கேற்ற வெப்பநிலை இல்லை. அதுமட்டுமல்லாமல் மேகங்கள் மிக உயரத்தில் சென்று தங்கியிருந்தால் மட்டும் போதாது. மிகக் கீழே தாழ்ந்தும் இருக்க வேண்டும். ஒரு மேகத்தில் உச்சி மேற்கூறிய அதிசீதள மண்டலத்திலும் அடி உறை நிலைக்குக் கீழுள்ள மண்டலத்திலும் இருந்தால் பெரு மழை பெய்யும்.

அப்போது அதில் மேல் பாகத்தில் பனிகட்டித் துணுக்குகள் ஆவியாக மாறும் விரைவை விட நீர்த்துளிகள் ஆவியாக மாறும் வேகம் அதிகம். ஆதலால் ஆவியெல்லாம் பனிக்கட்டித் துணுக்குகளால் விரைவில் கிரகிக்கப்பட்டு அவை பருத்து விடுகின்றன. பின்னர் அவை கீழேயிறங்கும்போது உறைநிலைப் பிரதேசம் வரை உறைபனியாகவும் அதற்குக்கீழ் நீர்த்துளிகளாகவும் மாறிவருகின்றன. இவைகள் வரும் வழியில் உள்ள நீர்த்துளிகளையும் சேர்த்துக் கொண்டு வருகின்றன. ஆகையால்தான் பூமிக்கும் அவற்றுக்கும் இடையில் உலர்ந்த காற்று இருந்தாலும் அவை ஆவியாகாமல் பூமியை வந்தடைகின்றன.

உறைநிலைப் பிரதேசத்தை யடையாத மேகங்கள் மழையாகப் பெய்வதில்லை. உறைநிலைப் பிரதேசத்துக்கு அப்பால் வெறும் பனிக்கட்டித் துணுக்குகளை மட்டும் பெற்றிருக்கும் மேகம் மழையைப் பெய்யாது. உறைநிலைப் பிரதேசத்தை அடைந்து அதிசீதள மண்டலத்தை யடையாத மேகங்களும் அவ்வாறுதான். மேகத்தில் உள்ள துளிகள் அதிக உயரத்தில் சென்று அவற்றில் சில பனிக்கட்டித் துணுக்குகளாக மாறினால் மட்டுமே மழை பெய்யும். ஆனால் மழைகளெல்லாம் இவ்வாறே உண்டாவதில்லை. புயலுடன் கூடிய மழை, பெருத்த மழை, ஆலங்கட்டி மழை முதலியவைகளே இவ்வாறு உண்டாகின்றன.

வெப்பப் பிரதேசங்களில் சாதாரணமாகப் பெய்யும் மழைகள் இவ்வாறு உண்டாதில்லை. அங்கு மேகங்கள் சுமார் பத்தாயிரம் அடி கனமுள்ளவையாய் இருப்பதால் அவற்றில் மேலிருந்து கீழே நீர்த்துளிகள் இறங்கும்போது மற்ற நீர்த்துளிகளுடன் மோதியும் வழியிலுள்ள நீராவியை நீராக மாற்றியும்

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

இலை	மன்மத, வைகாசி,	தளிர்
7	3-6-55 வெள்ளி.	35

முயல்வோம் வெல்வோம்

'நம் தமிழகத்தின் பல்கலைக் கழகங்களில் போதனைமொழி தமிழாக இருத்தல் வேண்டும்.' என்றமுழக்கத்தைத் தமிழகமெங்கும் இன்றுகேட்கிறோம்; மகிழ்வடைகிறோம். தமிழ் நாட்டிலே, தமிழ்மொழி போதனை மொழியாக இருக்கவேண்டும் என்பதற்குக் கூட்டம் போட்டுப் பேசிடும் அளவுக்கு நமது தாய்மொழியின் நிலை இருப்பது பற்றி நாம் ஒரு பக்கம் வருந்தவேண்டியிருக்கிறது. எனக்கு 'டமில்' பேசவாராது என்று ஆங்கிலச் செருக்கில் தமிழைப் புறக்கணித்த காலம் மலையேறிவிட்டது.

'தமிழ்' 'தமிழ்' 'தமிழ் நாடு' என்று அமிழ்தினும் இனிய ஒலி நாடெங்கும் ஒலிக்க, மக்கள் தமிழார்வம் கொண்டு எழுச்சி பெற்றிருக்கும் காலம் வந்திருக்கிறது. சங்க இலக்கியங்களுக்குச் சரிநிகர் சமானமாய் நாங்களும் இலக்கியங்கள் பல சமைத்திடுவோம் என்று மார்தட்டிக் கிளம்பியிருக்கின்ற தமிழறிஞர் குழாமைக் கண்டு பேருவகை பூக்கின்றோம்.

இந்தப் பெருமித நிலையில், தமிழ்மொழி மூலம் கல்லூரிகளில் பாடங்களைப் போதிப்பது தற்போது இயலாத காரியம் என்று வெறும் வீரியம் பேசிடும் 'மாக்களை'க் கண்டு மனம் புண்படத்தான் செய்கிறது.

நேற்றுப் பிறந்த இந்தியை இந்தியப் பெருநாட்டின் பொதுமொழியாகச் செய்ய முயலும் இந்தி வெறியர்களை நம் உள்ளம் எண்ணுகிறது. மேனாடுகளில், குறிப்பாகச் செஞ்சீனாவில், அந்நாட்டு மொழியிலேயே கல்வி முதற்கொண்டு அரசியற் பணிகள் வரை இயங்கி வருவதையும் நினைக்கிறது. தமிழ் மொழியிலே ஆராய்ச்சி நிகழ்த்தி நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள் நம் கண்முன் நிற்கின்றார்கள். எத்தகைய இடர் வரினும் நற்காலமாக, நமது தமிழ் நாட்டில் இன்று பெரிய தலைவர் அனைவரும் தமிழராகத் திகழ்கின்றனர். முதன் மந்திரியாரும், பிற மந்திரிப் பெருமக்களும், கல்வித் துறைத் தலைவரும், அரசியற் பணியாளரும், தமிழராகத் திகழ்வது நமது பாக்கியமே.

"இத்தகைய சூழ்நிலையில் தமிழ்மொழியைப் போதனை மொழியாக ஆக்குதல் இப்போது சாத்தியமில்லை" என்று தமிழறிஞர் சிலர் செப்புகின்றனர். இவர் கூற்றை நோக்கிச் சிரிப்பதா, அழுவதா? நமக்கு ஒன்றும் புரியவில்லை. தமிழில் ஆங்கிலத்திற்குச் சரியான கலைச் சொற்கள் சில இல்லாமல் இருக்கலாம்; மறுக்கவில்லை, ஒப்புக்கொள்கிறோம். அதற்காக, 'சாத்தியமில்லை' என்ற வார்த்தையைக் கூறிடல் தகுமா? இன்றே தமிழைப் பல்கலைக்கழகப் போதனமொழி ஆக்க இயலும்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இனமுறை என்சொல் வழியே இருந்திடெனில் சுகமாய் இருந்திடு, நீ என் சொல்வழி போற்றிலையானாலோ, நினையளவுன் அதிகாரஞ் செல்லவொட்டே னுலகஞ் சிரிக்கவுனை யடக்கிடுவேன் திருவருளால் கணத்தே, நனவிலெனை யறியாயோ யாரென விங்கிருந்தாய் ஞானசபைத்; தலைவனுக்கு நல்ல பிள்ளை நானே"

திருவருட்பா- நெஞ்சறிவுறுத்தல்,

குறிப்பு:— ஞானசபைத் தலைவனுக்கு என்பது, அறிவு மன்றத் தலைவனுக்கு நல்ல பிள்ளையென்று காண்க

சாதாரணப் பிள்ளையாக இருந்தால் தலைவன் சொற்படி நடவாதவனாகவும் இருக்கக் கூடும்; தலைவனும் பிள்ளையின்பால் அக்கறையற்றவனாகவும் காணக் கூடும். ஆனால் இங்கு "ஞானசபைத் தலைவனுக்கு நல்ல பிள்ளை" என்று கூறி ஐயத்தைப் போக்கினர். நாமும் இப்படி "நல்ல பிள்ளை" யாக ஆகவேண்டாமா?